சுடர் ஒளி
THE SUDAR OLI
සුඩර් ඔළි
14.08.2020 வெள்ளிக்கிழமை

# யாழ்.பண்ணை பகுதியில் மனித எலும்பு எச்சங்கள்!

யாழ்ப்பாணம், ஓக.14
யாழ்ப்பாணம், பண்ணை, மீனாட்சிபுரத்தில் உள்ள தனியார் காணி ஒன்றில் இருந்து இன்று மனித எலும்பு எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.
கட்டுமானப் பணி ஒன்றுக்காக அகழ்வுகள் மேற்கொண்டபோது மனித எலும்பு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. எலும்பு எச்சங்களுடன் பெண்கள் அணியும் ஆடைகளும் காணப்படுகின்றன. அதனால் அந்த எலும்புக்கூடு பெண்ணுடையதாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. இந்தக் காணி 2006ஆம் ஆண்டுக்கு முன்னர் இராணு

2

## புதினம் தெரியுமோ?

இந்தத் தேர்தலோட கூட்டமைப்புக்க பெரும் விரிசல். ரண்டு, மூண்டு தரப்பா நிண்டு கூட்டமைப்புக்காரர் 'பப்ளிக்கா' சண்டை போடுறளவுக்கு நிலைமை போய்க்கொண்டிருக்கு. அதைவிட இன்னொரு பக்கமாக உடையிற நிலைமையில இருக்கிற ஆக்களை ஒற்றுமைப்படுத்திற வேலையும் ஓடிக்கொண்டிருக்கு. மாவையரை அவரின்ர காங்கேசன்துறைத் தொகுதியில வெல்லவிடாமல் வேலை செய்தவை எண்டு நம்பப்படுகிற ஆக்கள், நேற்று அவரைச் சந்திச்சு, என்ன நடந்ததெண்டு விளக்கியிருக்கினம்.

2

## 85 அரச நிறுவனங்களை இயக்கும் தெம்புண்டா?

*மஹிந்தவைப் பார்த்து கேட்கிறார் மயந்த*

கொழும்பு, ஓக.14
70 வயதைக் கடந்துள்ள மஹிந்த ராஜபக்சவின் கீழ் 85 அரச நிறுவனங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. முதியவர் ஒருவரால் எவ்வாறு அவற்றை வினைத் திறன்மிக்கதாக இயக்க முடியும். ராஜபக்சக்களுக்குத் தேவையான வகையில் புதிய அரசமைப்பு இயற்றப்படும்

2



# தடையை மீறி செஞ்சோலை நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஓக.14
செஞ்சோலைப் படுகொலை நினைவேந்தலை நடத்துவதற்குப் புதுக்குடியிருப்புப் பொலிஸார் தடை விதித்திருந்த நிலையில், அதை மீறி இன்று காலை நினைவேந்தல் நடத்தப்பட்டது.

2

## 9ஆவது நாடாளுமன்ற முதல் அமர்வு 20ஆம் திகதி

யாழ்ப்பாணம், ஒக்.14
நாட்டின் 9ஆவது நாடாளுமன்றத்தின் முதல் அமர்வானது எதிர்வரும் 20ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்குக் கூடவுள்ளது. இதற்கான வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்

2



## பட்டதாரிகள் நியமன திட்டம் மீள ஆரம்பம்!

கொழும்பு, ஓக.14
தேர்தலால் நிறுத்தப்பட்டிருந்த பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கும் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தீர்மானித்துள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகளின் பெயர்கள்

2

## '19' மட்டுமல்ல '13'க்கும் கட்ட வேண்டும் சமாதி

*ஜனாதிபதியிடம் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் வலியுறுத்து*

கொழும்பு, ஒக்.14
இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள அரசமைப்பின் 13 மற்றும் 16ஆவது திருத்தச் சட்டங்களை இல்லாதொழிப்பதற்காக புதிய அரசமைப்பு ஒன்றை

2



# காணி, பொலிஸ் அதிகாரம் வடக்குக்கு வழங்கவிடோம்

**மாகாண மற்றும் உள்ளூராட்சி சபை இராஜாங்க அமைச்சர் திட்டவட்டம்**

கொழும்பு, ஓக.14
வடக்கு மாகாண சபைக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்க எந்த வகையிலும் இடமளிக்கப்போவதில்லை என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் இராஜாங்க அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார். கொழும்பு யூனியன் பிளேஸ் பிரதேசத்தில் அமைந்துள்ள மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி

2

# அரசியல் தீர்வைப் பெற பொதுத் திட்டம் தேவை

*தமிழ் அரசியல் கட்சிகளுக்கு சிறிதுங்க ஜயசூரிய அறிவுரை*

கொழும்பு, ஓக.14
தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வைக் காண்பதற்காகவேனும், அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் பொதுவானதொரு வேலைத் திட்டத்தை ஒருமித்த நிலைப்பாட்டுடன் முன்னெடுக்க வேண்டும். அவ்வாறு இல்லாது கருத்துமோதலில் ஈடுபட்டால் அது கோத்தாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசுக்கு வலுச் சேர்ப்பதாக அமைந்துவிடும். இவ்வாறு ஐக்கிய சோஷலிசக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்தார். இன்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர்

8

சுட்டெரிக்கும் உண்மைகளை சுமந்து வரும் மாலை இதழ்



# யாழ்.பண்ணை...

வத்தினரின் பயன்பாட்டில் இருந்த துள்ளது. அதன் பின்னர் மக்களின் பாவனைக்காகக் கையளிக்கப்பட்டி ருந்தது.
இது தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப் பட்டு, பொலிஸார் சம்பவ இடத் துக்கு வந்து விசாரணைகளை மேற் கொண்டனர்.
யாழ்ப்பாணம் மாநகர சபையின் பதில் முதல்வர் து.ஈசனும் சம்பவ இடத் துக்குச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டார். இந்தச் சம்பவங் கள் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (எ-25,20)



# 85 அரச...

அபாயம் உள்ளது.
இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பி னர் மயந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார்.
கொழும்பில் இன்று நடத்திய செய்தியா ளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத் தின்படி ஜனாதிபதியால் அமைச்சுப் பதவி வகிக்க முடியாது. அப்படியிருந்தும் அரசமைப்பை மீறும் வகையில் பாது காப்பு அமைச்சை அவர் தன் வசம் வைத்துள்ளார்.
மஹிந்த ராஜபக்ஷவுக்கு 74 வயதாகின் றது. அவரின்கீழ் 85க்கும் மேற்பட்ட அரச நிறுவனங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. கலாசாரம் உட்படச் சில அமைச்சுக்களும் அவரின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன. அவரால் எவ்வாறு சுறுசுறுப்பாக இயங்க முடியும் என்ற வினா எழுகின்றது.
இந்தப் பின்புலத்தில் புதிய அரசமைப்புத் தொடர்பில் கருத்துக்கள் வெளியிடப்பட் டுவருகின்றன. புதிய அரசமைப்பில் எவ்வாறான விடயங்கள் உள்ளடக்கப்ப டும் என்பது தெரியாது. சிலவேளை தமது ஆட்சி அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ளும் விதத்தில் தமக்குத் தேவை யான வகையில் அரசமைப்பை ராஜபக்சக் கள் உருவாக்கக் கூடும் என்ற அச்சம் காணப்படுகின்றது. இவற்றுக்கு எதிராக வும், ஜனநாயகத்துக்காகவும் போராட ஒன்றி ணையுமாறு அனைத்துத் தரப்புகளுக்கும் அழைப்பு விடுக்கின்றோம். என்றார்.(எ-44)

## புதினம் தெரியுமோ?

தாங்கள் வேற வேட்பாளர்களுக்காக வாக்குக் கேட்டது உண்மைதான் எண்டும், ஆனால் அவையோட சேர்த்து மாவைக்கும் போடச் சொல்லிச் சனத்துக்கு சொன்னதாகவும் விளக்கம் குடுத்தி ருக்கினம். அதைவிட இனிமேல் மாவையின் சொற்படிதான் தாங்கள் நடப்பம் எண்டு உறுதிமொழி கொடுத்ததாகக் கேள்வி. அதைவிட கொஞ்ச டொக்டர் மாரும் கூட்டமைப்பின்ர உடைவை ஒட்டவைக்க ஓடித் திரியினம். நேற்றிரவு ஒரு இடத்தில டின்னருக்கு மாவை யரை அவை கூப்பிட்டிருக் கினம். மாவையும் போய் இறங்கியிருக்கிறார். அங்க போனபிறகு தான் , அவருக்கு முதலே அங்க சுமந்திரன் வந்திருக்கிறதும் அவருக்குத் தெரிய வந்திருக்குது. சுமந்திரன் வாறதெண்டு தெரிஞ்சால் மாவையர் வரமாட்டார் எண்டு தான் டொக்டர்மார் அப்பிடிச் செய்திருக்கினம். அது மாவைக்கு அவ்வளவாப் பிடிப்பில்லை. பிறகு ரண்டு தரப்பை யும் சமாதானமாச் சேர்ந்து போகச் சொல்லியும், அப்பிடி போகாட்டி மற்றக் கட்சிகள் பலம டைஞ்சிடு மெண்டும் சொல்லுப்பட்டிருக்கு. ஆனால் பெரிசா இந்தச் சந்திப்பில முன்னேற்றமில்லை எண்டுதான் பட்சிக்குத் தகவல் கிடைச்சிருக்கு.
–பட்சி

# 9ஆவது...

சவால் நேற்றிரவு வெளியிடப்பட்டுள்ளது.
அதேவேளை, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் சவால் நேற்று வேறு பல வர்த்தமானி அறிவித் தல்களும் வெளியிடப்பட்டுள்ளன.
மஹிந்த ராஜபக் ஷவை பிரதமராக நியமிப்பது மற்றும் காமினி செனரத்தை பிரதமரின் செயலாளராக நியமிப்பது தொடர்பாக இரண்டு வர்த்தமானி அறிவிப்புகள் வெளியி டப்பட்டன.
புதிய அமைச்சரவை அமைச்சர்கள், இரா ஜாங்க அமைச்சர்கள் மற்றும் அமைச்சரவையின் புதிய செயலாளர்களின் நியமனம் தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு களும் வெளியிடப்பட்டன. (எ)

# '19' மட்டுமல்ல '13'க்கும்...

அரசு விரைவாக முன்வைக்க வேண் டும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குண தாச அமரசேகர நேற்றுத் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் தெரிவித்த தாவது:
அரசலமைப்பின் 19 ஆவது திருத் தச் சட்டத்தை மாத்திரம் நீக்குவதை இலக்காகக் கொண்டு அரசாங்கம் செயற்படக்கூடாது. 13, 16, 18 ஆகிய சரத்துகளையும் இல் லாதொழிப்பதற்காக புதியதொரு அரசமைப்புத் தேவையாகவுள்ளது. புதியதொரு அரசமைப்பை இயற்று வதற்கு மக்களும் ஆணை வழங்கியுள் ளனர்.
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை நேரில் சந்தித்து எமது மேற்படி யோசனையை முன்வைப்பதற்கு எதிர்பார்க்கின்றோம்.
நாடாளுமன்றத்துக்கு தெரிவானவர் கள் சபாபீடத்தில் சபாநாயகர் முன்னிலையில் உறுதியேற்பதே சிறப்பு. அதைவிடுத்து முள்ளி வாய்க்கால் போன்ற இடங்களில் பதவிப்பிரமாணம் செய்வது தவறான முன்னுதாரணமாகும். என்றார்.(எ44)

# காணி, பொலிஸ்...

சபைகள் அமைச்சில் இன்று கடமைகளைப் பொறுபேற்றுக் கொண்ட பின்னர் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
13ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்திற்கு அமைய காணி மற்றும் பொலிஸ் அதிகாரங் களை பெற்றுக் கொள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு கடும் அழுத்தங் களை கொடுத்து வருகிறது.
வடக்கு மாகாணத்திற்கு பொலிஸ் அதிகாரங் களை வழங்கினால், பொலிஸ் திணைக்களம் துண்டுகளாக பிளவுபடும். மாகாண பொலிஸ் மா அதிபர்கள் உருவாவார்கள். என்றார்.(எ)

# தடையை மீறி...

முல்லைத்தீவு, வள்ளிபுனத்தில் இருந்த செஞ்சோலை சிறுவர் இல்லம் மீது இலங்கை விமா னப் படை நடத்திய குண்டுவீச்சில் 54 மாணவிகள் உட்பட 61 பேர் கொல்லப்பட் டனர். இந்தக் கொடூரத் தாக்கு தல் 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதி நடந்தது.
கொல்லப்பட்ட மாணவிகளில் பெரும்பாலானவர்கள் க.பொ.த (உ/த) மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி நெறிக் காக கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய் கல்விவலய பாடசா லைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்டு செஞ்சோலை யில் கூடியிருந்த மாணவிகளில் ஒரு பகுதியினராவர்.
படுகொலை செய்யப்பட்டவர் களை நினைவுகூரும் நிகழ்வுகள் வருடந்தோறும் வள்ளிபுனம் இடைக்காட்டுச் சந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டு நடை பெறுவது வழமை.
பிள்ளைகளை இழந்த பெற்றோ ரும், உறவுகளும் சுடரேற்றி, மலர் தூவி கண்ணீர் விட்டுக் கதறி நினைவேந்துவர்.
போரின் பின்னர் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவதற்குக் கடும் கட்டுப்பாடுகள் காணப் பட்டன.
எனினும் கடந்த சில ஆண்டுக ளாக நினைவேந்தல் நிகழ்வுகள் எந்தவித இடையூறும் இன்றி நடைபெற்றன.
வழமைபோன்று செஞ்சோலை படுகொலை நினைவேந்தல் நிகழ்வுகளை இன்று காலை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.
தற்போது நாட்டில் புதிய அரசு பதவியேற்றுள்ள நிலையில் நினைவேந்தலை நடத்துவதற் குப் பொலிஸார் தடை விதித்திருந்தனர்.
நினைவேந்தலை நடத்தினால் கைது செய்யப்படுவீர்கள் என்று ஏற்பாட்டாளர்கள் எச்சரிக்கப் பட்டிருந்தனர்.
வழமையாக புதுக்குடியிருப்பு, வள்ளிபுனம் சந்தியில் நினைவு வளைவு அமைக்கப்பட்டு மாண விகளின் ஒளிப்படங்கள் வைக்கப்பட்டு நினைவேந்தல் நடத்தப்படும். இம்முறை பொலிஸாரின் இடையூறை அடுத்து, விமானத் தாக்குதல் நடத்தப்பட்ட இடத்தில் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப் பட்டது.
உயிரிழந்த மாணவிகளின் பெற்றோர்களும், உறவினர்க ளும் காலை 6.45 மணிக்கு சுடரேற்றி, மலர்தூவி அஞ்சலி செலுத்தினர். வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஆ. புவனேஸ்வரன் ஆகியோரும் நினைவேந்தலில் கலந்துகொண் டனர்.
நினைவேந்தலைத் தடுக்கும் நோக்கில் தேவிபுரம், இடைக் கட்டுவீதியில் உள்ள செஞ் சோலை வளாகத்தில் பொலி ஸார் குவிக்கப்பட்டிருந்தனர். அந்த இடத்தில் ஆயுதம் தாங்கிய படையினரும் பிரசன் னமாகியிருந்தனர்.
கெடுபிடிகளுக்கு மத்தியிலும் நினைவேந்தல் நிகழ்வு உணர்வு பூர்வமான நடைபெற்றது.
அதேவேளை, யாழ்ப்பாணத்தில் இருந்து வள்ளிபுனம் சென்ற எம்.கே.சிவாஜிலிங்கம் இடைக் காட்டுச் சந்தியில் பொலிஸா ரின் கட்டுப்பாடுகளை மீறி நினைவேந்தல் நடத்தினார்.
அந்த இடத்தில் நினை வேந் தலை நடத்த வேண்டாம் என்று பொலஸார் அறிவுறுத்திய போதும், அதை மீறி வழமை யாக நினைவேந்தல் நடக்கும் இடத்திலேயே சிவாஜி லிங்கத் தால் நினைவேந்தல் நடத்தப் பட்டது.
யாழ்ப்பாணம் செஞ்சோலைப் படுகொலை நினைவேந்தல் யாழ்ப்பாணத்திலும் இன்று காலை கடைப்பிடிக்கப்பட் டது. யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்பாக உள்ள உலகத் தமிழர் பண்பாட்டு இயக்க வளாகத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இந்த அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.
நினைவுச்சுடரை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்ப லம் ஏற்றினார். நினைவேந்தலில் கட்சியின் முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.(எ19,213,20)

# பட்டதாரிகள்....

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி செயலக உத்தியோகபூர்வ இணையதளத்தில் வெளியிடப்படவுள் ளது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.
தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகளுக்கான நியமனக் கடிதங்கள் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள் ளது. நியமனம் பெற்றவர்கள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி அருகாமையிலுள்ள பிரதேச செயலகங்களுக்கு வரவேண்டும் என்று அறிவுறுத்தப்பட் டுள்ளது. தகுதி பெற்ற பட்டதாரிகள் தமது பெயர் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியலில் வெளியிடப்படாவிடின் ஜனாதிபதி செயலகத்தில் விசாரிக்கலாம் எனவும் ஊடகப்பிரிவு சுட்டிக்காட்டி யுள்ளது.
அதேவேளை, தெரிவு செய்யப்பட்ட குறைந்த வருமா னமுடைய ஒரு இலட்சம் பேருக்கு தொழில் வழங்கும் செயற்றிட்டம் அதற்காக உருவாக்கப்பட்ட பணிக்குழு வால் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் செயற்படுத்தப்படும் என்றும் ஜனாதி பதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (எ)

# முன்னர் பின்பற்றிய அரசியல் கலாசாரமே நாட்டின் பின்னடைவுக்குக் காரணம்

### குற்றம் சுமத்துகின்றார் மின்சக்தி அமைச்சர் டலஸ்

கொழும்பு, ஓக.14



நாட்டில் இதற்கு முன்னர் பின்பற்றப்பட்ட அரசியல் கலாசாரமே நாடு பின்னடைவைச் சந்தித்திருக்கின்றமைக்கான காரணமாகும். நாம் அந்த அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்க வேண்டும் என்று மின்சக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

மின் சக்தி அமைச்சராக நேற்று வியாழக்கிழமை உத்தியோகபூர்வமாக கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டதன் பின்னர் கருத்து தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதுவரையில் அரசியல்வாதிகளே எமக்குத் தலைவர்களாகக் காணப்பட்டனர். ஆனால் தற்போதுள்ள ஜனாதிபதி முன்னாள் அரசியல்வாதியல்லர். அவர் தொழிநுட்பத்தில் சிறந்த நிபுணராவார்.

நாட்டின் முன்னேற்றத்தில் மின்சக்தி அமைச்சு மிக முக்கிய இடம் வகிக்கிறது என்று ஜனாதிபதி நம்புகின்றார். ஜனாதிபதி மீது அதிகளவான நம்பிக்கை வைத்தே மக்கள் அவருக்கு அதிகாரத்தை வழங்கியுள்ளனர். அந்த நம்பிக்கையை ஸ்திரப்படுத்துவதற்காகவே மிக முக்கிய அமைச்சை ஜனாதிபதி எம்மிடம் கையளித்துள்ளார்.

எமது நாட்டில் இதற்கு முன்னர் பின்பற்றப்பட்ட அரசியல் கலாசாரமே நாடு பின்னடைவைச் சந்தித்திருக்கின்றமைக்கான காரணமாகும். நாம் அந்த அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்க வேண்டும். தற்போது மின்சாரசபைக்கு 25 கோடி நஷ்டம் ஏற்பட்டுள்ளது. நாம் அதனை ஈடு செய்ய வேண்டும்- என்றார். (ரி3)

# வாகன விபத்தில் மாணவன் சாவு

அனுராதபுரம், ஓக.14

அனுராதபுரம் பாதெனிய வீதி, கல்கமுவபுதுறுவ கந்த பிரதேசத்தில் நேற்று மதியம் இடம்பெற்ற வாகன விபத்தில் பாடசாலை மாணவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

பாடசாலை மாணவன் பயணித்த மோட்டார் சைக்கிளில் பாரவூர்தி ஒன்றுடன் மோதுண்டதாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

அந்த மாணவன் பாடசாலை நிறைவடைந்ததும் தனது தந்தையுடன் மோ. சைக்கிள் பழுதுபார்க்கும் நிலையத்துக்கு சென்றுவிட்டு, மீண்டும் அதில் தனியாக பயணித்துக் கொண்டிருந்த வேளையில் இந்த விபத்து நேர்ந்துள்ளதாக தெரியவருகின்றது. (ரி2)

# ராஜாங்கனையில் மாணவன் ஒருவனுக்கு கொரோனா!

கொழும்பு, ஓக.14

இலங்கையில் சமூக மட்டத்தில் கொரோனாத் தொற்றாளர் ஒருவர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளார். ராஜாங்கன பிரதேசத்தில் பாடசாலை மாணவன் ஒருவரே இவ்வாறு தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளார் என அந்தப் பகுதி சுகாதார வைத்திய அதிகாரி சந்தியா அபேரத்ன தெரிவித்துள்ளார். ராஜாங்கனை 5 நவோத்யா வித்தியாலயத்தில் 11ஆம் வகுப்பில் கற்கும் 16 வயதுடைய மாணவனுக்கே கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது. அந்தப் பிரதேசத்தில் முதல் முறையாக கொரோனாத் தொற்றுக்குள்ளான நபரின் வீட்டிற்கு முன்னால் இந்த மாணவன் வசித்து வருகின்றார். அப்பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட 102 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சீ.ஆர் பரிசோதனையில் 101 பேர் ஆரோக்கியமாக உள்ளார்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர் என பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றுக்குள்ளான மாணவன் சிரி செவன வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அந்த மாணவன் கற்கும் பாடசாலையில் உள்ள மாணவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதோடு இதுவரையில் பாடசாலை மூடப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் ஏனைய பாடசாலைகளை மூடுவதற்கு தீர்மானிக்கவில்லை என தம்புத்தேகம கல்வி வலயப் பணிப்பாளர் ஜீ.கே.ஆர்.எம்.கே.பண்டார தெரிவித்துள்ளார். (ரி1)

## செஞ்சோலைப் படுகொலை நினைவேந்தல்





செஞ்சோலைப் படுகொலை 14ஆம் ஆண்டு நினைவேந்தல் வள்ளிபுனம், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டது.











# நாட்டின் அபிவிருத்திக்கு ஏற்ற வர்த்தகக் கொள்கை விரைவில்

கொழும்பு, ஓக.14

நாட்டின் அபிவிருத்திக்கு ஏற்றவிதமான வர்த்தகக் கொள்கை விரைவில் அறிமுகப் படுத்தப்படும் என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன குறிப்பிட்டுள்ளார். வர்த்தக அமைச்சில் நேற்று வியாழக்கிழமை தமது கடமை களை ஆரம்பித்து ஊழியர்கள் மத்தியில் உரையாற்றியபோதே



அவர் இதனைக் குறிப்பிட் டுள்ளார். மேலும், நாட்டிற்கு பாதகமான வர்த்தக ஒப்பந்தங் கள் அனைத்தும் இரத்துச் செய்யப்பட்டு, புதிய ஒப்பந் தங்கள் ஏற்படுத்தப்படும். நாட்டுக்குப் பொருத்தமான தும் மக்களின் நலனுக்கு ஏற்றதுமான புதிய சட்டங்க ளும் ஏற்படுத்தப்படும். பொருத்தமற்ற சட்டவிரோத வர்த்தக ஒப்பந்தங்கள் அனைத்தும் இரத்துச் செய்யப் படும் எனவும் தெரிவித்துள்ளார். (ரி3)

# விசேட சோதனையில் 27 பேர் கைது!

திருகோணமலை, ஓக.14

கிழக்கு கடற்படை கட்டளையின் கடற்ப டையினர், கடந்த இரண்டு வாரங்களாக மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக் கைகளின் போது சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 27 நபர்களைக் கைது செய்துள்ள னர், அவர்களிடமிருந்து 5 இயந்திரப்படகுகள் மற்றும் மீன்பிடி சாதனங்களையும் பறிமுதல் செய்துள்ளனர். இந்தக் கடற்படையினர் சேருநுவர, பூனாடி, முல்லைத்தீவு, கொக் குத்தொடுவாய் மற்றும் திருகோணமலை போல்டர் பொயிண்ட் ஆகிய கடல் பகுதிக ளில் மேற்கொண்ட விசேட நடவடிக்கைக ளின் போதே இவர்கள் கைது செய்யப்பட் டுள்ளனர்.

இவர்கள் சட்டவிரோத மீன்பிடி வலைக ளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட னர் என்ற குற்றச்சாட்டிலேயே கைதுசெய் யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மீன்பிடி உபகரணங் களுடன், திருகோணமலை மற்றும் முல் லைத்தீவு மீன்வள உதவி இயக்குநர்களிட மும், குச்சவெளி மீன்வள ஆய்வாளரிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ரி2)

# நீர் கட்டணங்கள் அதிகரிக்கப்படா!

## அமைச்சர் வாசுதேவ தெரிவிப்பு

கொழும்பு, ஓக.14



நீர் கட்டணங்களை அதிக ரிப்பதற்கு எந்தவித தீர்மா னத்தையும் அரசாங்கம் கொண்டிருக்கவில்லை என நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

மேலும், நீர் கட்டணங் களை அதிகரிக்க யோசனை முன்வைக்கப்படுமாயின், அது நீர் பாவனை அடிப் படையிலேயே முன்னெடுக்கப்படும் எனவும், நாட்டு மக்களுக்கு அவசியமான சுத்தமான குடி தண்ணீரை அனைவருக்கும் பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளோம் எனவும் தெரிவித்துள்ளார். தனது அமைச்சில் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரி வித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (ரி3)

# நாட்டின் சில பகுதிகளில் மழைக்கு சாத்தியம்

கொழும்பு, ஓக.14

சப்ரகமுவ, மத்திய, மற்றும் மேல் மாகாணங்க ளிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்க ளிலும் பல தடவைகள் சிறிதளவில் மழை பெய்யும் என இலங்கை வளிமண்டலவி யல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. நாட்டின் ஏனைய பிரதேசங்களில் சீரான வானிலை நிலவும் என எதிர்பார்க்கப்படு கின்றது.

நாடு முழுவதும், குறிப்பாக வடக்கு, வடமத் திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை, திருகோணமலை மற்றும் மாத்தளை மாவட்டங்களிலும் மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிக ளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப் படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது மேற்கு முதல் தென்மேற்கு வரையான திசைகளிலிருந்து வீசக்கூடும். காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30-40 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

காங்கேசன்துறையிலிருந்து மன்னார் ஊடாக புத்தளம் வரையான கடற்பரப்புகளிலும், மாத்தறையிலிருந்து ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தி யாலத்துக்கு 60 கிலோ மீற்றர் வரை அதிகரிக் கக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.(ரி3)

## பல்வேறுபட்ட குற்றச் செயல்கள்:

# ஒரு லட்சத்து 34,831 பேர் கைது

கொழும்பு, ஓக.14



கடந்த ஜூன் மாதம் 6ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் போதைப்பொருள் மற்றும் பல்வேறுபட்ட குற்றச்செயல் கள் தொடர்பில் ஒரு லட்சத்து 34,831 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித் துள்ளது.

இக் காலப்பகுதியில் ஹெரோய்ன், கஞ்சா மற்றும் ஐஸ் ரக போதைப்பொ ருள்களுடன் 26,886 பேரும், சட்டவி ரோத மதுபானம் தொடர்பில் 24,314 பேரும், ஹெரோய்ன் போதைப்பொரு ளுடன் 15,404 பேரும் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

அத்துடன் இந்தக் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்புக் களின் போது பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த 23,139 பேரும், பல்வேறுபட்ட குற்றச்செயல்களு டன் தொடர்புடைய 45,088 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ரி3)

# போலி இரத்தினக்கல்லை விற்க முயன்றவர்கள் கைது

அவிசாவளை, ஓக.14

அவிசாவளையில் போலியான இரத்தினக்கல் விற்பனை செய்ய முயன்ற இருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவிசாவளை பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலை அடுத்து இந்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த காலத்திலும் இவர்கள் இவ்வாறான சம்பவங்களுடன் தொடர்புபட்டுள்ளமை தெரிய வந்துள்ளது. (ரி2)



கைதடி குருசாமி வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற திருமதி விக்னேஸ்வரி சிவசுப்பிரமணியத்தின் பணிநயப்பு விழா, வித்தியாலய அதிபர் ந.ஜெயரூபன் தலைமையில் கடந்த புதன்கிழமை பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது ஆசிரியர் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து நினைவுப் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார். நிகழ்வில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். (ரி3-159)

# சுற்றுலா விசாக்கு சீனர்கள் தாய்மொழியில் விண்ணப்பிக்கலாம்

கொழும்பு, ஓக.14

இலங்கை சுற்றுலா விசாக்களுக்கு விண்ணப்பிக்க சீனர்கள் இனி ஆங்கிலம் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. சீனர்கள் தங்கள் தாய்மொழியில் விண்ணப்பிக்கலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை குடிவரவு திணைக்களம் மற்றும் சீனா பயண நிபுணர் பயணிகள் சர்வதேச பயண சேவை நிறுவனங்களுக்கிடையே புதிதாக நேற்று கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் விளைவாக இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது. (ரி2)

# கடற்கரையில் மறைத்து வைக்கப்பட்ட மஞ்சள் மூடைகள் மீட்பு

கொழும்பு, ஓக.14

சட்டவிரோதமாக நாட்டுக்குள் கடத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் மஞ்சள் மூடைகள் கடற்படையின ரால் நேற்று இரவு மீட்கப்பட்டுள்ளன.

மன்னார் ஒலுதுடுவாய் கடற்கரைப் பகுதியில் ரோந்துப் பணியில் ஈடு பட்ட கடற்படையினராலேயே, கடற்கரைக்கு அருகிலுள்ள புதர்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 57.2 கிலோ கிராம் எடையுள்ள உலர்ந்த மஞ்சள் நிரப்பப்பட்ட இரண்டு மூடைகள் மீட்கப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட மஞ்சள் யாழ்ப்பா ணம் சுங்க அலுவலகத்தில் ஒப்படைக் கப்பட உள்ளதுடன், விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (ரி3)

# மட்டு. பாடசாலைகளுக்கு செஞ்சிலுவையால் கைகழுவும் உபகரணங்கள்

மட்டக்களப்பு, ஓக.14

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளையினால் கொவிட் 19 திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப் பட்ட 10 பாடசாலைகளுக்கு பாதுகாப் பான முறையில் கைகழுவும் உபகரணங் கள் இன்று வழங்கப்பட்டுள்ளன என்று இலங்கைச் செஞ்சிலுவை சங்கத்தின் மட்டக்களப்புக் கிளையின் தலைவர் த. வசந்தராசா தெரிவித்துள்ளார்.

கொவிட்19 திட்டத்தின் கீழ், மட்டக்க ளப்பு மாவட்டத்தில் வீடு வீடாகச் சென்று கைகழுவுதல், முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பேணுதல் போன்ற விடயங்கள் தொடர்பில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன், மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பஸ் தரிப்பிடங்கள், பொதுச் சந்தை உள்ளிட்ட பொது இடங்களிலும் கொவிட்19 தொடர்பில் விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. அதேபோன்று பொதுப் போக்குவரத்து வாகனங்களிலும், ஸ்ரிக் கர்கள் ஒட்டப்பட்டு வருவதோடு, அது தொடர்பிலான துண்டுப்பிரசுரங்கள் பொது இடங்களிலும் வைக்கப்பட்டு வருகின்றன என த.சவந்தராசா மேலும் தெரிவித்துள்ளார். (ரி2-46)





# விரைவில் மாகாணசபை தேர்தல்

கொழும்பு, ஓக.14

அரசாங்கம் மாகாணசபை தேர்தலை நடத்துவதற்குத் தேவையான நடவடிக்கை களை விரைந்து முன்னெ டுக்குமென மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ.கமகே தெரி வித்துள்ளார். நேற்று வியா ழக்கிழமை மத்திய மாகாண ஆளுநர் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட் டுள்ளார். மேலும் மாகாண சபை தேர்தலை புதிய முறை மையில் நடத்துவதா அல்லது பழைய முறைமையில் நடத்து வதா என்பது தொடர்பாக நாடாளுமன்றமே தீர்மா னிக்கும். எனினும் ஆளுநர் என்ற வகையில், தேர்தலை நடத்துவதற்கு முழுமையான ஆதரவை வழங்க தீர்மா னித்துள்ளேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ரி3)

# ஊழியர் சேமலாப நிதி செலுத்தாத தொழில் வழங்குநர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

கொழும்பு, ஓக.14

ஊழியர் சேமலாப நிதியைச் செலுத் தாத தொழில் வழங்குநர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். நேற்றைய தினம் தொழில் அமைச்சில் தமது கடமை களை ஆரம்பித்த அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இது தொடர்பில் தெரிவிக்கையில்,

தொழில் அமைச்சு தொழிலாளர்களுக் காக சேவையாற்றும் இடமாக அன்றி தொழில் வழங்குநர் நிறுவனமாக இருக்கக்கூடாது. தொழிலாளர்களின் நெருக்கடிகள் பற்றியும் கூட்டுத்தாப னத்தின் செயற்பாடுகள் பற்றியும் எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள் ளன எனத் தெரிவித்தார். (ரி3)

# சுற்றுலாப் பயணிகளுக்கு புதிய கணினி மென்பொருள்!

கொழும்பு, ஓக.14

நாட்டின் விமான நிலையங்கள் திறக்கப்பட்ட பின்னர் வருகை தரும் சுற்றுலாப் பயணிகளைக் கண்காணிப்ப தற்கு கணினி மென்பொருள் ஒன்று அறிமுகம் செய்யப்ப டவுள்ளது என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை யின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்த மென்பொருள் மூலம் சுற்றுலாப் பயணிகள், விசா பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம் முதல் பார்வையிடும் இடங்கள் வரை அவதானிக்க முடியும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தரும் சந்தர்ப்பத்தில் மற்றும் அதன் பின்னர் 5 அல்லது 7 நாள்களுக்குப் பின்னரும் இரண்டு தடவைகள் அவர்க ளுக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வுள்ளன. இந்த பி.சி.ஆர் பரிசோதனைகளுக்காக சுற்று லாப் பயணிகளிடமிருந்து கட்டணம் அறவிடப்படவுள் ளமை குறிப்பிடத்தக்கது. (ரி2)

# இலங்கையுடனான உறவை வலுப்படுத்த பாகிஸ்தான் விருப்பம்

கொழும்பு, ஓக.14

இலங்கையுடனான உறவை வலுப்படுத்த பாகிஸ்தான் விரும்பம் தெரிவித்திருப்ப தாக பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் ஷா மெஹ்மூத் குரேஷி நேற்றுத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இரு நாட்டுக்குமிடையிலான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த நெருக்கமாக பணியாற்றுவதற்கு எதிர் பார்ப்பதாகவும் அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கையின் வெளியுறவுத் துறை அமை ச்சராக தினேஷ் குணவர்தன நியமிக்கப்பட்ட மைக்கு குரேஷி டுவிட்டர் பதிவினூடாக வாழ்த்துத் தெரிவிக்கையிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். (ரி2)

# எரிபொருள் நிரப்பவே விமானம் தரை இறக்கம்

*சீனத் தூதரக அதிகாரி அறிவிப்பு*

சீனாவில் கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள் ளோர் பயணித்த விமானம் தொழில் நுட்ப காரணங்களுக்காக மாத்தி ரமே கொழும்பில் தரை இறக்கப்பட் டது என சீன தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். கொரோ னாத் தொற்றுக்குள்ளான 23 பயணிக ளுடன் கடந்த 7ஆம் திகதி டுபாயில் இருந்து ஷங்காயிற்கு பயணித்த ஸ்ரீலங்கன் விமான சேவைக்குச் சொந்த மான விமானம் ஒன்று கொழும்பில் தரை இறக்கப்பட்டுள்ளது ஸ்ரீலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான யூ.எல் -866 எனும் அந்த விமானம் எரிபொருள் நிரப்புவதற்காக மாத்தி ரமே நிறுத்தப்பட்டது எனவும் இதில் பயணிகள் விமானத்திற்குள் உட்பிர வேசிக்கவோ வெளியேறவோ இல்லை எனவும் சீனத் தூதரகம் தெரி வித்துள்ளது. இந்த நிலையில், இந்த விமானம் ஷங்காய் விமான நிலையத் தில் தரையிறக்கப்பட்ட போது அதில் பயணித்த பயணிகள் 23 பேருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளின் அடிப்ப டையில் அவர்கள் அனைவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனச் சீன தூதரக அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். இதையடுத்து இலங்கை உள்ளிட்ட மூன்று நாடுகளின் விமான சேவை களை தற்காலிகமாக இடைநிறுத்து கின்றோம் என சீனா கடந்த புதன்கி ழமை அறிவித்திருந்தமை குறிப்பி டத்தக்கது. (ரி1)

# வவுனியாவில் புதிய வகை நாரைகள்

வவுனியா,ஓக.14

வவுனியா குளத்துக்கு புதியவகை நாரைக்கூட் டங்கள் இன்று வருகை தந்துள்ளன.

வறட்சிக் காலப்பகுதியில் வெவ்வேறு பிரதேசங்க ளைச் சேர்ந்த நீர்ப்பறவை கள் உணவுத்தேவையை பூர்த்தி செய்துகொள்வ தற்காக வவுனியா குளத்தை நோக்கிப் படையெடுக்கின்றமை வழமையாக உள்ளது.

அந்தவகையிலேயே இந்த நாரைக்கூட்டங்கள் வவுனியாவுக்கு வருகை தந்துள்ளன. (ரி2-110)

பொதுமக்கள் - அரசியல்வாதிகள்

# இரு தரப்பினரையும் நெறிப்படுத்த பொறிமுறை ஒன்று உருவாக்கம்

## பங்கேற்க தமிழ் மக்களை அழைக்கிறது பேரவை

யாழ்ப்பாணம், ஓக. 14

பொதுமக்கள், அரசியல்வாதிகளை நெறிப்படுத்தும் பொறிமுறை ஒன்று உருவாக்கப்படவுள்ளது என்றும், அதில் பங்கேற்க தமிழ் மக்களை அணிதிரளுமாறும், தமிழ் மக்கள் பேரவை அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பில் பேரவை அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் உள்ளதாவது;

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலிலே மக்கள் தமது தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள். அந்த மக்கள் தீர்ப்பு மதிக்கப்படவேண்டிய ஒன்றாகும். இந்தத் தேர்தலில் எந்தவொரு அணியினருக்கும் அவர்கள் எதிர் பார்த்த வெற்றி கிடைக்கவில்லை. அத்துடன் இந்தத் தேர்தலில் அரசியல் கட்சிகளுக்கிடையேயும் கட்சிக்குள்ளேயும் பல முரண்பாடுகளும் ஜனநாயக விரோதப்போக்குகளும் தலைதூக்கியிருப்பது வேதனையானது. இதனால் மக்கள், குழப்பமும் கவலையும் அடைந்திருக்கிறார்கள். ஒவ்வொரு தரப்பும் மறுதரப்பை விமர்சனம் செய்வதிலும் பார்க்க, சுயவிமர்சனம் செய்து தத்தமது நடவடிக்கைகளை நெறிப்படுத்திக் கொள்வது ஆரோக்கியமானதாக அமையும்.

தீய நோக்கங்களுக்காகத் தவறான கருத்துக்கள் பதிவிடப்படுவதும் அவற்றின் உண்மைத் தன்மை அறியாது அவை பகிரப்படுவதும் குழப்ப நிலைகள் மேலும் அதிகரிக்க வழிவகுக்கும். கருத்துக்கள் பதிவிடப்படும்பொழுது பிறரின் மனம் நோகாது சரியான, நாகரிகமான வார்த்தைப் பிரயோகங்களுடன் உண்மையை எழுதுவது தமிழரின் மரபுக்கு வலுச்சேர்க்கும். ஒருவரைப் பழி தீர்ப்பதற்காக ஊடகங்களைப் பயன்படுத்துவது அறம் ஆகாது. இவை சமூகங்களுக்கிடையே பிரிவினையை வளர்த்துக்கொள்வதற்கே வழிவகுக்கும். சமூக ஒற்றுமை என்பது தேசியத்தின் அடிநாதம். ஒற்றுமையில்லாது வெறுப்புக்கள் நீரூற்றி வளர்க்கப்படின் தேசியம் மடிந்து போகும் ஒரு துர்ப்பாக்கிய நிலை தோன்றலாம். ஒரு சமூகம் அங்கு நடைபெறும் நல்ல விடயங்களைக் கண்டறிந்து ஊக்கப்படுத்துமாயின், அது வளர்ச்சி பெறுவதுடன் ஒற்றுமையும் மேலோங்கும். எதையும் சந்தேகக் கண்ணுடன் நோக்கி, தீய சம்பவங்களை மட்டுமே வடித்தெடுத்து அநாகரிகமாக விமர்சிப்பது பிரிவுகளை ஆழமாக்கும்.

காலத்தின் தேவைகருதி தமிழ் மக்கள் பேரவையானது தமக்கென ஒரு புதிய யாப்பினை அறிமுகம் செய்யவிருக்கின்றது. இது தேர்தல் அரசியல் கடந்து தமிழ் மக்களின் ஒற்றுமைக்கும், அவர்களின் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கும், அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் வழிசமைக்கும். இந்த முயற்சியிலே பொது அமைப்புக்களினதும், பொதுமக்களினதும் பெரும் பங்களிப்பு எதிர்பார்க்கப்படுகின்றது. பொது மக்கள், அரசியல்வாதிகளை வழிநடத்தும் ஒரு பொறிமுறை நோக்கி நகர முயற்சி எடுக்க தமிழ் மக்களை அணிதிரள அழைக்கின்றோம் - என்றுள்ளது. (ப)

# மைத்திரிக்காக உருவாக்கப்படும் உயர் பதவி?



கொழும்பு, ஓக. 14

ராஜபக்சக்கள் அரசின் அமைச்சரவையில் மைத்திரிபால சிறிசேனவுக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படாத போதும், அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவியை விட உயர்வான பதவியொன்றை உருவாக்கி அதனை அவருக்கு வழங்கவுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் ஜனாதிபதியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேனவுக்கு, ராஜபக்சக்களின் அமைச்சரவையில் அமைச்சுப் பதவி வழங்கப்படவில்லை. சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த முக்கிய தலைவர்களுக்கும் அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவில்லை. பொதுஜன பெரமுனவுடன் இணைந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி போட்டியிட்டிருந்தாலும், இரு கட்சிகளுக்கும் இடையே தேர்தல் மேடைகளிலேயே பகிரங்கமாக மோதல்கள் வெடித்திருந்தன.

இந்த நிலையில் மைத்திரிபால சிறிசேனவுக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படாததும் முக்கிய விடயமாகக் கருதப்பட்டது.

ராஜபக்சக்கள் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைக் கொண்டிருப்பதன் காரணமாக புதிய அரசமைப்பை உருவாக்குவது அல்லது அரசமைப்பைத் திருத்துவது என்ற ஏதாவதொரு நடவடிக்கையை முன்னெடுக்க வுள்ளனர். இதனூடாக அமைச்சரவை அந்தஸ்தை விட உயர்ந்த பதவியொன்றை உருவாக்கி அதனை மைத்திரிபாலவுக்கு வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ,5)

# கலந்துரையாடல்

சாவகச்சேரி ஓக. 14

தென்மராட்சி பிரதேச முன்பள்ளிகளை மீள ஆரம்பிப்பது தொடர்பாக பிரதேச மட்டக் குழு அமைப்பதற்கான கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் எதிர்வரும் 19 ஆம் திகதி தென்மராட்சி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு பிரதேச செயலர் திருமதி சு.உஷா தலைமையில் நடைபெறவுள்ளது.

முன்பள்ளிகளை மீள ஆரம்பிக்கும் போது கொவிட் -19 பரவுவதைத் தவிர்ப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளுக்காகவும் மாகாணக் குழுவால் வழங்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைவாகவும் பிரதேச மட்டக் குழு அமைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

# சீன நிறுவனத்துக்கு எதிராக மக்கள் தொடர்ந்து எதிர்ப்பு

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையை நிர்மாணித்த சீன நிறுவனத்துக்கு எதிராக அங்குனுகொலபெலஸ்ஸ பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மக்கள் தொடர்ந்து எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இந்த நெடுஞ்சாலைப் பணிகளுக்காக கருங்கற்களை பெற்றுக்கொள்ளச் சென்ற வேளையிலேயே இந்த எதிர்ப்பு நடவடிக்கையை மக்கள் வெளிப்படுத்தினர்.

கருங்கற்களை உடைப்பதற்குப் பயன்படுத்தப்படும் வெடி பொருள்களால் குடியிருப்புக்களுக்கு சேதம் ஏற்படுவதாகவும், இது தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

# முன்னோடி பரீட்சை

கரணவாய், ஓக. 14

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடத்தும் க.பொ.த.உயர்தரப் பரீட்சை மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை எதிர்வரும் 20 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இந்த பரீட்சை தொடர்ந்து செப்ரெம்பர் மாதம் 5 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-108)

# சட்டத்தின் ஆட்சி தொடர்பாக மன்னாரில் விசேட செயலமர்வு

மன்னார், ஓக. 14

நாட்டில் நடைமுறையில் உள்ள சட்டங்களையும் தனி மனிதனுடைய உரிமைகளையும் அறிந்து கொள்வதன் ஊடாக மத ரீதியான பிரச்சினைகளை சமரசமாக்கும் முகமாக 'மதசகவாழ்வுக்கான கூட்டு ஈடுபாடு' எனும் தொனிப்பொருளில் சட்டத்தின் ஆட்சி தொடர்பான செயலமர்வு நேற்று வியாழக்கிழமை மன்னார் தனியார் விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

தேசிய சமாதானப் பேரவையின் மாவட்ட இணைப்பாளர் எம். உவைஸ் தலைமையில் தொடர்பாடலுக்கான மையம் நிறுவனத்தின் அமைப்பாளர் ஜோன்சனது ஒழுங்கமைப்பில் இந்தச் செயலமர்வு நடைபெற்றது.

இதன்போது மாவட்ட ரீதியில் மத நல்லிணக்கம் தொடர்பாகச் செயலாற்றும் மதகுருக்கள், கிராம அலுவலர்கள், சமூக ஆர்வலர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதி கள்எனப்பலரும் கலந்து கொண்டனர்.

செயலமர்வில் இலங்கையின் சட்டத்தின் அடிப்படையில் தனி ஒரு மனிதனுக்கு காணப்படும் சட்ட ரீதியான உரிமைகள் தொடர்பாகவும், மத ரீதியாகக் காணப்படும் சுதந்திரம் தொடர்பாகவும் சட்டத்தரணி எம்.ஏ. ஹக்கீம் விரிவுரையாற்றினார். நடைமுறைப் பயிற்சிகளும் வழங்கப்பட்டன. (ஐ-56)

# ரஷ்ய நாட்டவருக்கு கொரோனா இல்லை

## சொந்த நாட்டுக்கு அனுப்ப நடவடிக்கை

மன்னார், ஓக. 14

தலைமன்னார் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் காலாவதியான விசாவுடன் சட்டவிரோதமாக தங்கியிருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட ரஷ்ய நாட்டைச் சேர்ந்தவருக்கு கொரோனாத் தொற்று இல்லை என்று கண்டறியப்பட்டுள்ளது.

இதனால் அவரை அவரது சொந்த நாட்டுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது,

கைதுசெய்யப்பட்ட நபர் நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தார். அவருக்கு கொரோனாத் தொற்று தொடர்பான பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு நேற்று வியாழக்கிழமை குறித்த அறிக்கை மன்னார் நீதிவான் மாணிக்கவாசகர் கணேசராஜாவிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

அறிக்கையின் பிரகாரம் அவருக்கு கொரோனாத் தொற்று இல்லை என தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து ரஷ்ய நாட்டவர் சார்பாக முன்னிலையாகியிருந்த சட்டத்தரணி எஸ்.டினேசனினால் மிரிகான ஊடாக குறித்த நபரை அவரது சொந்த நாட்டுக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மன்றில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. கோரிக்கையை ஏற்று அவரை அவரது சொந்த நாட்டுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை சட்டத்தரணியூடாக மேற்கொள்ளுமாறு நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டது. (ஐ-6)



# 2040 இல் கடல் கழிவுகள் 3 மடங்கு அதிகரிக்கும்

அரசுகளும் நிறுவனங்களும் பிளாஸ்டிக் உற்பத்திகளைக் குறைக்காவிடில் அடுத்த 20 ஆண்டுகளில் கடலில் கலக்கும் கழிவுகளின் அளவு மூன்று மடங்குகளாக அதிகரிக்கும் எனத் தகவல் வெளியாகியுள் ளது. உலகை அச்சுறுத்தி வரும் கொரோனாத் தொற்றுக் காரணமாக முகக்கவசங்கள், கையுறைகள் உள்ளிட்ட பிளாஸ்டிக் பொருள்களின் பயன்பாடு அதிகரித்துள்ளது என சர்வதேச திண்மக்கழிவு சங்கத்தின் ஆய்வறிக்கை தெரிவித்துள்ளது.

மேலும் இவ்வாறான நிலை நீடிக்குமாயின் 2040 ஆம் ஆண்டில் கடலில் பிளாஸ்டிக் கழிவு 600 மில்லியன் தொன் அதிகரிக்கும் என்றும், இது 30 லட்சம் நீலத் திமிங்கலங்களின் நிறைக்குச் சமம் என்றும் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். இதை தடுக்க கடலில் பிளாஸ் டிக் கழிவு கலப்பதை 80 சதவீதம் வரை கட்டுப்படுத்த வேண்டுமென்றும் நிபுணர்கள் வலியுறுத்தி உள்ளனர். (ரி1)



# டோஹா வர்த்தக மையத்தில் தீப் பரவல்

டோஹாவின், அல்கனிம் பகுதியிலுள்ள அல் ஜஸ்ரா வர்த்தக மையத்தில் நேற்றுப் பிற்பகல் பெரும் தீப் பரவல் ஏற்பட்டுள்ளது என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின் றன. தீப் பரவலைத் தொடர்ந்து வர்த்தக மையத்தில் இருந்தவர்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளனர்.

விபத்தில் எவ்வித உயிர்ச் சேதமும் ஏற்படவில்லை என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளி யிட்டுள்ளன. எனினும் இந்த தீ விபத்தில் கட்டடம் முற்றாக எரிந்து தீக்கிரையாகி யுள்ளது. (ரி1)

# தலைமுடி கலைகிறது ட்ரம்ப் முறைப்பாடு

வொஷிங்டன், ஒக.14

குளியல்குழாய் நீரின் குறைவான வேகத் தால் தனது தலைமுடி கலைந்து போகின் றது என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முறைப்பாடு செய் துள்ளார். அதனைத் தொடர்ந்து அவரது நிர்வாகம் குளியல்குழாய் நீரின் வேகம் தொடர்பான விதிகளை மாற்றியமைக்கப் பரிந்துரை செய்துள்ளது. 1992 ஆம் ஆண்டு விதிமுறையின்படி, ஷோவர் ஹெட் (showerhead) எனும் குளியல் குழாயிலிருந்து அதிகபட்சம் நிமி டத்துக்கு 17 போத்தல் தண்ணீர் மட் டுமே வரவேண்டும். ஆனால் ட்ரம்ப் நிர்வாகம் குழாயின் ஒவ்வொரு துளையி லிருந்தும் அதிகபட்சம் நிமிடத்திற்கு 17 போத்தல் நீர் வெளியாகும்படி விதி முறையை மாற்றியமைக்க முடிவெ டுத்துள்ளது. இவ்வாறு செய்வது தண் ணீரை வீணடிக்கும் செயல் என்று வாடிக்கையாளர், இயற்கைப் பாதுகாப் புக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (ரி1)



# லொஸ்ஏஞ்சல்ஸில் காட்டுத் தீ



அமெரிக்காவின் கலிபோர்னியா மாகா ணத்திலுள்ள லொஸ் ஏஞ்சல்ஸில் அண்மையில் 10,000 க்கும் மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பில் காட்டுத் தீ பரவ ஆரம்பித்தது. இதன் காரணமாக அப் பகுதி முழுவதும் புகை மண்டலமாக காட்சியளித்துள்ளது. இதையடுத்து அப்பகுதியில் வசிக்கும் ஆயிரக்கணக் கான பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர். எனினும் இக் காட்டுத் தீயினால் எவ்வித உயிரிழப்பும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ரி1)

# நடிகை நிக்கி கல்ராணிக்கு கொரோனாத் தொற்று



நடிகை நிக்கி கல்ராணிக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த தகவலை நிக்கி கல்ராணி தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித் துள்ளார்.

இது குறித்து அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் வெளி யிட்டுள்ள பதிவில்,'கடந்த வாரம் மேற்கொண்ட பரிசோதனையில் எனக்கு கொரோனா தொற்று உறுதியானது. நான் இப்போது குணமடைந்து வருகி றேன். என்னைக் கவனித்துக்கொண்ட நெருங்கிய சொந்தங்களுக்கும், முன்கள சுகாதார ஊழியர்களுக் கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்" எனப் பதிவிட் டுள்ளார்.

இவர் தமிழில் 'டார்லிங்', 'வேலைன்னு வந்துட்டா வெள்ளைக்காரன்', 'கடவுள் இருக்கான் குமாரு', 'மொட்ட சிவா கெட்ட சிவா', 'நெருப்புடா', 'ஹர ஹர மகாதேவகி', 'கலகலப்பு2', 'கீ' போன்ற படங்க ளில் நடித்தவராவார்.

# லங்கா பிரீமியர் லீக் ஒத்திவைப்பு

கொழும்பு, ஓக.14
லங்கா பிரீமியர் லீக்கின் அறிமுக சீசன் ஓகஸ்ட் மாதம் 28 திகதி நடைபெறும் என்று அறிவிக்கப் பட்டிருந்த நிலையில் அது நவம்பர் மாதத்துக்கு ஒத்திவைக் கப்பட்டுள்ளதாக தகவல் வெளி யாகியுள்ளது. சமீபத்தில் லங்கா பிரீமியர் லீக் அறிமுக தொடரின் கொழும்பு, கண்டி, காலி, தம் புள்ளை,யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களைச் சேர்ந்த அணிகள் அறிவிக்கப்பட்டன.




போட்டிக்கான அட்டவணை தயா ரிக்கப்பட்டபோது, வெளிநாட்டு வீரர்களுக்கும் அழைப்பு விடுக்கப் பட்டது. இந்த நிலையில் இலங்கை கிரிக்கெட் சபை, சுகாதார வழிகாட்டு நெறிமுறைகள் குறித்து இலங்கை சுகா தார அமைச்சுடன் பேச்சுவார்த்தை நடத்திய வேளையில், வெளிநாடுகளில் இருந்து போட்டியில் பங்குபற்ற வரும் வீரர்கள் கட்டாயம் 14 நாள்கள் போட்டியில் பங்குபற்ற தனிமைப்படுத் திக் கொள்ளவேண்டும் என்று தெரி வித்திருந்தது.
போட்டி ஆரம்பிக்கும் நிலையில், வீரர்கள் ஏலம், அணி அறிமுக விழா இவற்றை விடுத்து வெளிநாட்டு வீரர் களை 14 நாள்கள் தனிமைப்படுத்துவது சாத்தியமில்லாத காரணத்தால் இந்தப் போட்டி ஒத்திவைக்கப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது. (ரி2)

## பயிற்சியாளருக்கு கொரோனா

லண்டன், ஓக.14
2020 ஐ.பி.எல் . சீச னுக்கான ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் களத்தடுப்புப் பயிற்சி யாளருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப் பட்டுள்ளது.



ஐ.பி.எல். 2020 தொடர் ஐக்கிய அரபு அமீரகத்தில் அடுத்த மாதம் 19 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இதற்காக அணிகள் எதிர்வரும் 21 ஆம் திகதி டுபாய் புறப்படவுள்ளன, புறப்படுவதற்கு முன்னர் அணியைச் சேர்ந்த அனைவருக்கும் இரண்டு முறை கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு கொரோனா தொற்று இல்லை என்பது உறுதியான பின்னர்தான், டுபாய் செல்ல அனுமதிக்கப்படுவார்கள். இந்த நிலையில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் களத் தடுப்பு பயிற்சியாளர் திஷந்த் யாக்னிக், கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார்.

இதனை அவர் தனது டுவிட்டர் பக்கத்தின் மூலம் உறுதிப்படுத்தியுள்ளார். மேலும், கடந்த 10 நாள்க ளாக தன்னுடன் தொடர்பில் இருந்தவர்கள் பரிசோ தனை செய்து கொள்ளுங்கள். மேலும், பி.சி.சி.ஐயின் வழிகாட்டு நெறிமுறைப்படி நான் என்னை 14 நாள்கள் தனிமைப்படுத்திக் கொண்டுள்ளேன். ஐக்கிய அரபு அமீரகத்தில் அணியுடன் இணைய எனக்கு இன்னும் இரண்டு நெகட்டிவ் முடிவு தேவை என்று அவர் தெரிவித்துள்ளார். (ரி2)



## அரசியல் தீர்வை...

வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
இலங்கையில் இனப்பிரச்சினை என்று ஒன்றும் இல்லை. தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்க வேண்டியதில்லை என்ற நிலைப்பாட்டிலேயே ராஜபக்ச அரசு உள்ளது. அது மட்டுமல்ல சிங்கள, பௌத்த மேலாதிக் கத்தை முன்னிலைப்படுத்தி, சிறுபான்மை மக்களைப் புறக்கணிக்கும் வகையிர் அரசின் பயணம் அமையும் அபாயம் இருக்கின்றது. தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வை வலியு றுத்திப் பொதுவானதொரு வேலைத் திட்டத்தைத் தமிழ் அரசியல் கட்சிகள் முன்னெ டுக்க வேண்டும். கூட்டணியாக இணைந்து பயணிக்குமாறு நான் கூறவில்லை. ஆனால் தீர்வுத் திட்ட விடயத்தில் மாறுபட்ட கருத்துக்களை முன்வைத்துக் குழப்பாமல், ஒருமித்த நிலைப் பாட்டுடன் பொதுவானதொரு திட்டத்தை முன்னெடுக்கலாம் என்ற ஆலோசனையை முன்வைக்கின்றேன்.
ஒவ்வொரு கட்சிகளும் வெவ்வேறான நிலைப் பாட்டில் கருத்துக்களை முன்வைத்தால் தீர்வை நோக்கிய பயணம் திசைமாறும். காலத்தை இழுத்தடிப்பதற்கு ராஜபக்ச தரப்புக்குக் களம் அமைத்துக் கொடுப்பதாகவும் அமைந்துவிடும். தீர்வைப் பெறுவதற்காகவேனும் பொதுவான தொரு வேலைத் திட்டத்துக்கு வருமாறு தீர்வுத் திட்டத்துக்காகப் பல ஆண்டுகள் குரல் கொடுப்ப வன் என்ற ரீதியில் அழைப்பு விடுகின்றேன்.
அதேவேளை, பெரும்பான்மைப்பலம் இருந்தா லும் இந்த அரசை நாம் இருக்கும்வரையில் துள்ளவிடமாட்டோம். என்றார். (எ-44)

## முதல் சுற்றில் செரீனா வெற்றி

வொஷிங்டன், ஓக.14

கொரோனா வைரஸ் காரண மாக முடங்கியிருந்த சர்வதேச டென்னிஸ் போட்டிகள் மீண்டும் ஆரம்பித்துள்ளன.

கென்டக்கியின் லெக்சிங்ட னில் நடைபெற்றுவரும் டாப் சீட் பகிரங்க டென்னிஸ் 2020 தொடரில் செரீனா வில்லி யம்ஸ் 6 மாதங்களுக்கு பிறகு மிகவும் உற்சாகமாக விளை யாடி வெற்றி பெற்றுள்ளார்.

இந்த நிலையில் நேற்று நடைபெற்ற போட்டியில் செரீனா அமெரிக்க வீராங் கனை பெர்னார்டா பெராவை 46, 64 மற்றும் 61 என்ற செட் கணக்குகளில் தோற்கடித்து வெற்றியைப் பெற்றுள்ளார்.

இதேவேளை, தன்னுடைய மூத்த சகோதரி வீனஸ் வில்லி யம், விக்டோரியா அசரெங் காவை 63 மற்றும் 62 என்ற செட் கணக்குகளில் வீழ்த்தி யுள்ளதால் இரண்டாவது சுற்றில் செரீனா அவரை எதிர் கொள்ளவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.(ரி2)

## பயிற்சி முகாமிலிருந்து ஜடேஜா விலகல்

புதுடில்லி, ஓக.14
சென்னையில் சி.எஸ்.கே நிர்வாகம் ஏற்பாடு செய்த பயிற்சி முகாமிலிருந்து அணியின் நட்சத்திர வீரர்களில் ஒருவரான ரவீந்திர ஜடேஜா விலகியுள்ளார்.

2020 ஐ.பி.எல் போட்டி ஐக்கிய அரபு அமீரகத்தில் செப்ரெம்பர் 19 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், அங்கு செல்வதற்கு முன்னர் அணி வீரர்களுக்காக சி.எஸ்.கே அணி சென்னையில் 5 நாள்கள் பயிற்சி முகாமை ஏற்பாடு செய்துள்ளது. டோனி, ரெய்னா உள்ளிட்ட சி.எஸ்.கே வீரர்கள் இப்.பயிற்சி முகாமில் பங்கேற்கவுள்ளனர். இந்த நிலையில், தனிப்பட்ட காரணங்களுக்காக சென்னையில் நடைபெறும் பயற்சி முகாமில் கலந்துக்கொள்ள முடியாது என்று ரவீந்திர ஜடேஜா அணி நிர்வாகத்திடம் தெரிவித்துள்ளார்.

ஓகஸ்ட் 21 ஆம் திகதி சி.எஸ்.கே அணி சென்னையில் இருந்து ஐக்கிய அரபு அமீரகத்துக்கு புறப்பட திட்டமிட்டுள்ள நிலையில் அப்போது ஜடேஜாவும் அணியுடன் இணைவார் எனக் கூறப்படுகிறது.(ரி2)



இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 14.08.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.